Thalaivaasal
தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 72 | thalaivaasaltv@gmail.com | ஞாயிற்றுக்கிழமை | டிசம்பர் 13, 2020

## மாகாணசபைத் தேர்தல்: முடிவு நாளை

தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கான யோசனையொன்றை நாளை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக அரச சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

## தொற்று பிரதேசங்கள்

| | |
|---|---|
| கொக்குவில் | 1 |
| தெல்லிப்பழை | 3 |
| அளவெட்டி | 2 |
| உரும்பிராய் | 1 |
| நவாலி | 1 |
| கீரிமலை | 2 |
| மானிப்பாய் | 2 |
| உடுவில் | 2 |
| இணுவில் | 2 |
| சங்கானை | 1 |
| பண்டத்தரிப்பு | 1 |
| சுன்னாகம் | 2 |
| கைதடி | 1 |
| ஏழாலை | 3 |
| காங்கேசன்துறை | 1 |
| சண்டிலிப்பாய் | 1 |

# யாழ்ப்பாணம் முடக்கம்?



## 26 பேருக்கு தொற்று

மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர்களுக்கு இன்று (டிசெ. 13) ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் 26 பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி அறிவித்துள்ளார்.

இதன்மூலம் மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணியினால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 33ஆக உயர்வடைந்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள முதலாவது கோரோனா வைரஸ் பரவல் கொத்தணி இதுவாகும். நாட்டில் ஒக்டோபர் 4ஆம் திகதிகுப் பின்னர் மினுவாங்கொட, பேலியகொட மற்றும் சிறைச்சாலை கொத்தணிக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள 4ஆவது கோரோனா வைரஸ் கொத்தணி இதுவாகும்.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடுமுழுவதும் எழுமாறாக தெரிவு செய்யப்படுவோரிடம் பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதனடிப்படையில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்பில் மருதனார்மடம் சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் உள்ள சாரதிகளிடம் கடந்த புதன்கிழமை மாதிரிகள் பெறப்பட்டு பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பரிசோதனையின் முடிவில் மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரியாகவும் முச்சக்கர வண்டி சாரதியாகவும் உள்ள 38 வயதுடைய குடும்பத்தலைவர் ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு கண்டறியப்பட்டது.

அதனையடுத்து அவர் கோவிட் - 19 சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டார். அவரது குடும்பம் உடுவில் பிரதேச சபை ஒழுங்கையில் உள்ள அவர்களது வீட்டில் சுய தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரனின் அறிவுறுத்தலில் மருதனார்மடம் பொதுச் சந்தை மற்றும் அதனைச் சூழவுள்ள வியாபார நிலையங்களில் உள்ளவர்கள் என 394 பேரிடம் இன்று சனிக்கிழமை மாதிரிகள் பெறப்பட்டன.

மாதிரிகள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டன.

நேற்றைய பரிசோதனையில் முச்சக்கர வண்டியின் சாரதியின் குடும்பத்தைச் சேர்ந்த 6 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டன. அவர்கள் கோப்பாய் கல்வியற் கல்லூரி கோவிட் -19 சிகிச்சை நிலையத்துக்கு மாற்றப்பட்டனர்.

நேற்று பெறப்பட்ட மாதிரிகளில் ஏனையோரின் பிசிஆர் பரிசோதனையும் இன்று மீளவும் பெறப்பட்ட மாதிரிகளின் பிசிஆர் பரிசோதனையின் முடிவுகளும் இன்றிரவு வெளியிடப்பட்டுள்ளன.

## உடுவில் பிரதேச செயலர் பிரிவில் முடக்கப்பட்ட கிராமங்கள் விபரம்

உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முடக்கப்பட்ட கிராமங்கள் விபரம்.
உடுவில் பிரதேச செயலகம்

1 . J / 182 உடுவில் தென் மேற்கு
2 . J / 183 உடுவில் தென் கிழக்கு
3 . J / 184 உடுவில் மத்தி
4 . J / 185 உடுவில் வட மத்தி
5 . J / 186 உடுவில் வடக்கு
6 . J / 187 சங்குவேலி
7 . J / 188 இணுவில் தென்மேற்கு
8 . J / 189 இணுவில் கிழக்கு
9 . J / 190 இணுவில் வடகிழக்கு
10 . J / 191 இணுவில் மேற்கு
11 . J / 192 தாவடி தெற்கு
12 . J / 193 தாவடி கிழக்கு
13 . J / 194 தாவடி வடக்கு
14 . J / 195 சுன்னாகம் நகர் வடக்கு
15 . J / 196 சுன்னாகம் நகர் தெற்கு
16 . J / 197 சுன்னாகம் நகர் கிழக்கு
17 . J / 198 சுன்னாகம் நகர் மத்தி
18 . J / 199 சுன்னாகம் நகர் மேற்கு
19 . J / 200 கந்தரோடை
20 . J / 201 ஏழாலை மேற்கு
21 . J / 202 ஏழாலை தென்மேற்கு
22. J / 203 ஏழாலை தெற்கு
23. 23 . . J / 204 ஏழாலை கிழக்கு
24. 24 . J / 205 ஏழாலை வடக்கு
25. 25 . J / 206 ஏழாலை மத்தி
26. 26 . . J / 207 புன்னாலைக்கட்டுவன் தெற்கு
27. J / 208 புன்னாலைக்கட்டுவன் வடக்கு
28 . J / 209 ஈவினை
29 . J / 210 குப்பிளான் தெற்கு
30 . J / 211 குப்பிளான் வடக்கு

## உடுவில், தெல்லிப்பளைக் கோட்ட பாடசாலைகளுக்குப் பூட்டு

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உள்பட்ட உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகள் மற்றும் தெல்லிப்பழை கல்விக் கோட்ட பாடசாலைகள் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் இன்று ஞாயிற்றுக்கிழமை அறிவித்துள்ளார்.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உள்பட்ட 33 பாடசாலைகளும் தெல்லிப்பழை கல்விக் கோட்டத்துக்கு உள்பட்ட 40 பாடசாலைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படுகிறது.

மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணியின் பின் இந்த இரண்டு கல்விக் கோட்டப் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, மருதனார்மடம் கோரோனா தொற்றுத் கொத்தணியின் முதலாவது நபரின் மகளுக்கு நேற்று தொற்று உள்ளமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அவர் கடந்த வாரம் பாடசாலைக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.




தரணி எங்கும் தமிழராய் இணைவோம்



# வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினருக்கு பிடியாணை

வவுனியா வெடுக்குநாரி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினருக்கு வவுனியா நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்து உத்தரவிட்டுள்ளது.

நெடுங்கேணி வெடுக்குநாரி மலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருட் திணைக்களமும் நெடுங்கேணி பொலிசாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்ததுடன், தொல்பொருட்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்கினையும் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த வழக்கு வவுனியா நீதிமன்றில் கடந்த ஒக்டோபர் மாதம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது ஆலயத்தின் சார்பில் தலைவர் சசிகுமார், செயலாளர் தமிழ்செல்வன், பூசகர் மதிமுகராசா ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

நீதி மன்றில் ஆஜராகியிருந்த பொலிசார் ஆலய நிர்வாகத்தினரை கைது செய்ய வேண்டும் என்றும் தொல்பொருட்கள் சார்ந்த விடயம் என்பதால் வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை ஆலய நிர்வாகத்தினரை விளக்கமறியலில் வைக்கவேண்டும் என்றும் நீதவானிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

எனினும் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் ஆலய நிர்வாகத்தினர் விடுவிக்கப்பட்டதுடன், நவம்பர் 6 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து, கடந்த நவம்பர் 6 ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றில் மீண்டும் ஆஜராகிய நிலையில், கொவிட்-19 அச்சுறுத்தல் காரணமாக அனேகமான வழக்குகள் விசாரணைகளிற்கு அழைக்கப் படாமல் தவணை இடப்பட்டிருந்தது.

அந்தவகையில் 2021 ஆம் வருடம் தை மாதத்திற்கு வழக்குகள் ஒத்திவைக்கப் பட்டிருந்தன.

இந்நிலையில் வழக்கினை முன்னமே அழைக்குமாறு தொல்பொருட் திணைக்களம் மற்றும் பொலிசார் சார்பாக ஆஜராகிய சட்டதரணிகளால் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி அதாவது நேற்றுமுன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எனினும் வழக்கின் திகதி மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக நெடுங்கேணி பொலிசார் தமக்கு தெரியப்படுத்தவில்லை என்று தெரிவித்த ஆலய நிர்வாகத்தினர், இதனால் அன்றையதினம் நீதிமன்றிற்கு சமூகமளிக்கவில்லை என்று தெரிவித்தனர்.

இதன்காரணமாக அவர்கள் ஆஜராகமையால் ஆலய நிர்வாகத்தினருக்கு நீதமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு உத்தரவிடப் பட்டுள்ளது.

தலைவாசல் எங்கள் பாரம்பரியம் Thalaivaasal

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்



அதிகளவு சீனி உள்ளடக்கிய உணவுகளையும் பானங்களையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். தினமும் ஆகக்கூடியளவு 6 தேக்கரண்டி சீனியை உட்கொள்ளலாம். அதிக ளவு சீனி உள்ளெடுப்பின்தொற்றா நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகம்.

நீங்கள் உள்ளெடுக்கும் பானங்களிலுள்ள சீனியின் அளவை அதில் குறிக்கப்பட்டுள்ள சிவப்பு, மஞ்சள், பச்சை நிறத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**வைத்தியகலாநிதி**
**கோ.றஜீவ்**

# முஸ்லிம்களின் உடல்களை மாலைதீவில் அடக்கம் செய்ய அனுமதி?



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை மாலைதீவில் அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்ய இலங்கை அரசு அனுமதி வழங்காத நிலையில், மக்கள் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக நீதி அமைச்சர் அலி சப்ரிக்கும் பலத்த அழுத்தங்கள் வழங்கப்படுவதால் அவர் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்ய முற்பட்டார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் உடல்கள் எரிக்கப்படுவதால் அதிகளவு முஸ்லிம் மக்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படாமல் இருக்கின்றனர். எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், மாலைதீவு அரசுடன் இராஜாங்க மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் இதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை வான்பரப்பில் தென்படவுள்ள எரிகற்கள் மழைவீழ்ச்சி ஆபத்தை ஏற்படுத்துமா?

இலங்கை மக்களால் எதிர்வரும் இரண்டு நாட்களுக்கு எரிகற்கள் மழைவீழ்ச்சியை தெளிவாக பார்வையிட முடியும் என ஆதர் சி கிளார்க் நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கை வான்பரப்பில் இன்றும் (ஞாயிற்றுக்கிழமை) நாளையும் எரிகற்கள் மழைவீழ்ச்சியைப் பார்க்க முடியுமென அந்த நிறுவகம் தெரிவித்துள்ளது.

இன்று இரவு 9 மணிக்குப் பின்னர் கிழக்கு வானிலும் நள்ளிரவில் தலைக்கு மேலான வான்பரப்பிலும்அதிகாலைப் பொழுதில் சூரியன் உதிப்பதற்கு முன்னர் மேற்கு வானிலும் இதனை தெளிவாக காண முடியும் என அந்த நிறுவகம் தெரிவித்துள்ளது

எவ்வாறாயினும் இந்த எரிகற்கள் நேரடியாக பூமியில் விழாது என்றும் அதனால் ஆபத்துகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமுறை மணிக்கு 130 எரிகற்கள் அளவில் வீழ்வது இலங்கை வான் பரப்பில் தெளிவாக காட்சியளிக்கும் என்பதோடு, இவை பல வண்ணங்களில் பயணிக்கும் என்பதாலும் இதற்கு ஜெமினிட்ஸ் எரிகல்வீழ்ச்சி என்று பெயரிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வால் நட்சத்திரங்கள் விட்டுச்சென்ற துகல்களின் வழியே புவி பயணிக்கும் போது இந்த காட்சிகள் தென்படும் என்றும் எரிகற்களானது மணித்தியாலத்திற்கு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் விழும் எனவும் அந்த நிறுவகம் குறிப்பிடப்படுகிறது.

# மாணவியுடன் அநாகரிகமாக நடந்தவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க கோரிக்கை

தனங்கிளப்பு பகுதியில் பாடசாலை மாணவிக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தல் கொடுத்ததுடன், மாணவியின் தாயார் மீதும் தாக்குதல் நடத்திய வருக்கு எதிராக பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அயலவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

தனங்கிளப்பு பகுதியில் வசிக்கும் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றின் அயல் வீட்டில் வசிக்கும் நபர், வெள்ள நீர் தனது வீட்டு வளவுக்குள் வராத வகையில் அயல் வீட்டு வாசலில் இருந்த மண்ணை வெட்டி, தனது வீட்டு வேலிக்கு போட்டுள்ளார்.

அதனை அவதானித்த வீட்டுப்பெண், எதற்காக எங்கள் வீட்டு வாசலில் இருக்கும் மண்ணை வெட்டுறீங்க, இப்படி என்றால், எங்கள் வீட்டு வாசலில் வெள்ளம் தேங்கும், என சொல்லி இருக்கிறார்.

அதற்கு மண்ணை வெட்டிக் கொண்டு இருந்த நபர், கையில் இருந்த மண்வெட்டியால் அப்பெண்ணை தாக்கியுள்ளார். அதனால் அவர் மயக்கமுற்று விழுந்துள்ளார். அதனை அவதானித்த வீட்டிலிருந்த தாக்குதலுக்கு உள்ளான பெண்ணின் மகளான பாடசாலையில் கற்கும் மாணவி, ஓடி வந்த போது, குறித்த நபர் தன்னுடைய சாரத்தைக் கழட்டி விட்டு மாணவியை நோக்கி "வா .. " என அழைத்துள்ளார்.

அந்நபரின் குறித்த செயலால் அருவறுப்படைந்த மாணவி பயத்தினால் வீட்டினுள் ஓடி சென்று கதவினை பூட்டி விட்டு கூக்குரல் இட்டதுடன், கிராம சேவையாளர் மற்றும் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளார்.

அதேவேளை மாணவியின் கூக்குரலை அடுத்து அயலவர்களும் கூடியதை அடுத்து மயக்கமுற்ற பெண்ணை மீட்டு சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

சம்பவ இடத்திற்க்கு வந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் தாக்கிய நபரை கைது செய்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது அந்நபர் விடுவிக்கப்பட்டு உள்ளதாகவும், அவர் தான் தாக்கியதற்காக 2 ஆயிரம் ரூபாய் பணம் தருவதாக அந்த பெண்ணிடம் கூறியுள்ளதாகவும், அதற்கு அவர்கள் சம்மதிக்க வில்லை எனவும் அயலவர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை கணவர் இல்லாது தனது மகளுடன் தனித்து வாழும் குடும்ப பெண் மீது தாக்குதல் நடாத்தி, மாணவியுடன் அநாகரிகமாக நடந்து கொண்ட நபர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப் படவில்லை. ஆதரவற்று நிற்கும் அந்த குடும்பம், அந்நபரினால் தமக்கு மீண்டும் ஏதேனும் ஆபத்து நடந்து விடுமோ எனும் அச்சத்தில் உள்ளனர். எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உதவ வேண்டும் என்பதுடன், தாக்குதல் நடத்தியவர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய வேண்டும் என ஊரவர்கள் கோரியுள்ளனர்.

# கொரோனாவால் முடங்கிய உடுவில் பிரதேச செயலர் பிரிவு











## பெண்ணொருவரின் கொடூர செயல்! பிறந்த சிசுவை மண்ணில் புதைத்து கொலை

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி - பிரமந்தனாறு பகுதியில் இன்று மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண்ணுக்கு குழந்தை பிறந்தமை கண்டறியப்பட்டது.

இந்நிலையில் பிறந்த தனது குழந்தையை மண்ணில் புதைத்ததாக பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

"பிரமந்தனாறு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் இன்று (13) மதியம் மயக்கமடைந்த நிலையில் மீட்கப்பட்டு கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், குழந்தை பிறந்ததை கண்டறிந்த நிலையில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அங்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், தனக்கு குழந்தை பிறந்ததாகவும், குறித்த குழந்தையை புதைத்துவிட்டதாகவும் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் குழந்தை புதைக்கப்பட்ட இடம் தொடர்பான தகவலில் உள்ள குழப்பம் காரணமாக சம்பவ இடத்தை கண்டுபிடிப்பதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது" - எனத் தெரியவருகிறது.

## தம்புள்ளை வர்த்தக மைய தொற்று 12 ஆக அதிகரிப்பு!



தம்புள்ளை வர்த்தக மையத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்கள் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தம்புள்ளை வர்த்தக மையத்தில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையின் போதே இவ்வாறு நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான நால்வரும் தம்புள்ளை வர்த்தக மையத்தில் மூன்று வர்த்தக நிலையங்களில் தொழில் புரிவோர் என தம்புள்ளை நகர முதல்வர் ஜாலிய ஓம்பான தெரிவித்தார்.

தம்புள்ளை வர்த்தக மையத்தில் இதுவரை மேற்கொண்ட பி.சீ.ஆர். பரிசோதனைகளில் 12 தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு கோடி ரூபா பெறுமதியான மஞ்சளுடன் இந்தியர்கள் மூவர் கைது



கல்லாறு முனையை அண்மித்த கடற்பரப்பில் ஒரு கோடி ரூபா பெறுமதி வாய்ந்த மஞ்சள் பொதியுடன் இந்தியர்கள் மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன்று (13) கல்லாறு முனையிலிருந்து சுமார் 27 மைல் தொலைவில் இந்திய படகொன்றின் மூலம் குறித்த மஞ்சளை நாட்டிற்குள் கடத்த முயற்சித்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த படகில் 2404 கிலோ 300 கிராம் மஞ்சள் கண்டுபிடிக்கப்பட்டதோடு கைதாகிய இந்தியர்கள் மூவரும் 37, 40, 49 வயதுடையவர்களென தெரிவிக்கப்படுகிறது.

## நல்லூர் ஐஸ்கிறீம் கடையில் தீவிபத்து!

யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் அமைந்துள்ள ஐஸ்கிறீம் கடை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள குறித்த கடையின் சமையல் அறையிலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் யாழ்ப்பாணம் காவல்துறையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தன் காரணமாக உடனடியாக மாநகர தீயணைப்பு பிரிவினருக்கு அறிவித்ததை அடுத்து தீயணைப்பு பிரிவினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்து சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாண காவல் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இன்று 650 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில் மேலும் 135 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் இன்றைய தினம் 650 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## அரச நிர்வாக சேவையில் 380 வெற்றிடங்கள்

அரச நிர்வாக சேவையில் 380 பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக அரச நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் பிரதேச செயலாளர்களுக்கான வெற்றிடமும் காணப்படுவதாக, அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஜனவரி மாதத்தில் 200 புதிய அதிகாரிகளை இணைத்துக்கொள்ளவுள்ளதாகவும் இதற்கான பரீட்சை நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அத்துமீறும் இந்திய மீனவர்களை தாக்குவோம்!

## வடமராட்சி மீனவர் அமைப்பு எச்சரிக்கை

வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் இந்திய இழுவைப்படகுகளின் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் எத்தனை உயிரிழப்பு நிகழ்ந்தாலும் பின்வாங்கப்போவதில்லை என்றும் வடமராட்சி வடக்கின் 13 மீனவர் சங்கங்கள் கூட்டாகத் தீர் மானித்துள்ளன.

இது குறித்த கலந்துரையாடல் சற்று முன்னர் சக்கோட்டையில் நடை பெற்றுள்ளது.

சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்களின் சமாசத் தலைவர் நாகராசா வர்ண குலசிங்கம் கருத்துத் தெரிவித்தார்.

அண்மைய காலமாக இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் நடவடிக்கைகள் மிக அதிக அளவில் காணப்படுகின்றன. எமது மீன்வளம் முழுமையாக அபகரிக்கப்படுகின்றது. எமது மீனவர்கள் மீன்பிடி நட வடிக்கையை கைவிட்டு கூலிவேலைக்கு செல்லவேண்டிய அபாய நிலைகூட ஏற்படக்கூடிய ஆபத்து காணப் படுகின்றது.

குறித்த அத்துமீறல் நடவடிக்கைகள் தொடர்பில் இந்திய, இலங்கையின் அனைத்துத் தரப்பினருக்கும் கடிதங்கள் மூலமும் நேரடியாகவும் கோரிக்கை விடுத்தோம். இருந்தபோதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே இன்று ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இழுவைப்படகில் வருபவர்களைத் தாக்குவோம். அதன் போது ஏற்படும் மோதலில் எத்தனை உயிரிழப்புக்கள் நிகழ்ந்தாலும் அஞ் சப்போவதில்லை.

அவ்வாறு ஏற்படப்போகும் இழப்புக்களுக்கு இரண்டு நாட்டு அரசாங்கங்களும் தான் பொறுப் பேற்கவேண்டும். இன்று தொடக்கம் இழுவைப்படகுகளைக் கண்டால் உடனடியாகச் சென்று அடித்து தாழ்ப்போம் என்று தீர்மானிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# வரும் பண்டிகைக் காலத்தில் கட்டுப்பாடுகள் தேவையிருக்காது



இலங்கையில் எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மேலும் நடமாட்டக் கட்டுப் பாடுகளை விதித்து, பிரதேசங்களை தனி மைப்படுத்தவோ, ஊரடங்கு உத்தரவை அமுலாக்கவோ தேவை ஏற்படாது என கொவிட்-19 தொற்றுப் பரவலைத் தடுப்ப தற்கான தேசிய செயற்பாட்டு நிலையத்தின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 51 நாட்களாக முடக்கப்பட்டிருந்த சில வீடமைப் புத் திட்டங்களில் தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் நீக்கப்பட்ட ஆறு வீடமைப்புத் தொகுதிகள் சார்ந்த பொலிஸ் பிரிவுகளில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாகிறது.

அந்தப் பிரதேசங்களில் மேற்கொள் ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை பெறு பேறுகளுக்கு அமைய எதிர்காலத்தில் அவற்றையும் நீக்குவது தொடர்பான தீர் மானத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார்.

# கொரோனாவால் இலங்கையில் 92 முதியவர்கள் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலை மூலம் கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று வரை 136 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் 92 பேர் 60 வயதைக் கடந்தவர்கள் என்று சுகாதார அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் 10 - 30 வயதுக்கிடைப்பட்ட 3 பேரும், 31- 40 வயதுக்கிடைப்பட்ட 4 பேரும், 41 - 50 வயதுக் கிடைப்பட்ட 13 பேரும், 51 - 60 வயதுக் கிடைப்பட்ட 23 பேரும், 61 - 70 வயதுக் கிடைப்பட்ட 29 பேரும், 74 வயதுக்கு மேற் பட்ட 64 பேரும் இதுவரை உயிரிழந்துள் ளனர்.

# புதுக்கட்சி தொடங்குகிறார் சம்பிக்க ஹெல உறுமயவிலிருந்து விலகல்

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்று விலகினார்.

அரசியலில் புதிய பாதை ஒன்றில் பயணிப்பதற்காகவே ஜாதிக ஹெல உருமயவிலிருந்து சம்பிக்க விலகி யிருப்பதாகத் தெரிகின்றது.

இலங்கை மன்றத்தில் நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் விசேட



பிரதிநிதிகள் கூட்டத்தில் அவர் இந்தத் தீர்மானத்தை அறிவித்தார். புதிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காகக் கட்சியிலிருந்து நீங்குகின்றார் என்று பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய செயற்குழு உறுப்பினர்களும் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர். கருணாரத்ன பரணவிதான, நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, அநுருத்த பிரதீப், மற்றும் நிரோஷா அத்துகோரள ஆகியோர் கட்சியின் செயற்குழுவிலிருந்து விலகியுள்ள னர்.

# வெள்ளவத்தை மயூரா பிளேஸ் உட்பட பல பகுதிகளில் நாளை முதல் ஊரடங்கு

மேல் மாகாணத்தில் பல பகுதிகள் நாளை முதல் முடக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை யில், ஏற்கனவே முடக்கப்பட்டுள்ள சில பகுதிகள் நாளை காலை விடுவிக்கப் படவுள்ளன.

வெள்ளவத்தை மயூரா பிளேஸ் உட்பட கம்பஹா மாவட்டத்தின் ஐந்து கிராமசேவகர் பிரிவுள், களுத்துறை மாவட்டத்தில் 3 பிரிவுகள் நாளை காலை முதல் மறு அறிவித்தல் வரை தனி மைப்படுத்தல் ஊரடங்கு நடை முறைப்படுத்தப்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

# வெளிநாடுகளில் சிக்கிய 594 பேர் இன்றும் நாடு திரும்பினர்!

கொரோனா முடக்கம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களில் மேலும் 594 பேர் இன்று நாடு திரும்பியுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத் தில் இருந்து 144 பேரும், மாலைதீவில் இருந்து 31 பேரும், கட்டாரில் இருந்து 51 பேரும், அவுஸ்ரேலியாவில் இருந்து 75 பேரும், ஜப்பானின் நரீட்டாவில் இருந்து 203 பேரும் இவ்வாறு இன்று காலை இலங்கை திரும்பி யுள்ளனர்.

# 39 இராஜாங்க அமைச்சுக்களுக்கு செயலாளர்களை நியமிப்பது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியானது

39 இராஜாங்க அமைச்சுக்களுக்கான செயலாளர்களை நியமிப்பது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜய சுந்தரவின் கையெழுத்துடன் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளி யிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் குறித்த நியமனங்கள் செல்லு படியாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, தேசிய பாதுகாப்பு உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன நியமிக்கப் பட்டுள்ளார்.

ஆரம்ப சுகாதார சேவை, தொற்று நோயியல் மற்றும் கொவிட் நோய் கட் டுப்பாட்டு இராஜாங்க அமைச்சின்





செயலாளராக வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக டி.பி.ஜி குமாரசிறியும் சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஜி.சி.கருணாரத்னவும் நியமிக்கப்பட் டுள்ளார்.

அத்தோடு, மருந்து உற்பத்தி, விநி யோகம் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சின் செயலாளராக கே.ஆர். உடுவாவல நியமிக்கப்பட்டுள்ளார்.

# மஹர சிறை வன்முறை 255 பேரிடம் வாக்குமூலம்!

மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியினர் இதுவரை 255 பேரிடம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

சிறைச்சாலை வைத்தியசாலையில் பணியாற்றிய வைத்தியர்கள். சம்பவத்தின்போது சிறையில் இருந்த கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட மேலும் சிலரிடமே இவ்வாறு வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட் டுள்ளன.

நேற்று மாத்திரம் 27 பேரிடம் வாக்கு மூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.